நாளைய நவநாகரீக டிசைன்களை இன்றே தெரிவு செய்யுங்கள்
- தரமான ஜவுளி
- அனைத்து டிசைன் சாரிகள்
- பட்டு, வேட்டிகள், சேலைகள்

யாழ்நகரில் தலைசிறந்த ஜவுளி சமுத்திரம்
சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 24413

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்

Seematy (Fancy Goods)
158, Model Market,
JAFFNA.
சீமாட்டி பாம் முட்டை, [illegible] (இறைச்சிக் கோழி) உடனுக்குடன் புதியவையாகப் பெற்றுக்கொள்ளலாம்.
T'Phone: 24096

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ௵ கார்த்திகை ௴ 26 ௳ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 28 (11-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 15

காங்கேசனில் ரயில் எஞ்ஜின் பெட்டிகள் துணிகரக் கடத்தல்

சிறிது நேரத்தில்தேடுதல், துப்பாக்கி வேட்டுகள்

—அலுவலகச் செய்தியாளர் வலிராஜ்—

யாழ்ப்பாணம், டிச 11

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைப் பகுதியிலிருந்து ஒரு ரயில் எஞ்ஜினும் இரு பெட்டிகளும் கடத்தப்பட்டன.

நேற்று மாலை 5.30 மணி அளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வளவுக்குள் நேற்றுமாலை ஐவர் ஆயுதங்களுடன் நுழைந்தனர். ரயில் சாரதி ஒருவரை கடத்தி வந்து அங்கு ஏற்கனவே நின்ற ரயில் எஞ்ஜின் ஒன்றை இயக்க வைத்தனர். அங்கு நின்ற இரு சரக்கு ரயில் பெட்டிகள் இந்த எஞ்ஜின் மூலம் வெளியே இழுத்துச் செல்லப்பட்டன.

பின்பு சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து சுமார் அரை மைலில் காங்கேசன்துறைக்கும் மாவட்டபுரத்துக்கும் இடையில் எஞ்ஜினும் இரு ரயில் பெட்டிகளும் கைவிடப்பட்டிருந்தன.

ரயில் பெட்டிகளில் இருந்த பொருள்கள் முற்றாக லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு விட்டன என்று தெரிய வந்தது.

இந்தப் பொருள்கள் ஆயுதப்படையினருக்காக அனுப்பிவைக்கப்பட்டவை என்றும் கூறப்படுகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ். -- கொழும்பு

லொறிச் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச 11

யாழ் – கொழும்பு லொறிச் சேவை நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்துவது என யாழ் முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியம் முடிவு செய்திருக்கிறது.

கடந்த சனிக்கிழமை யாழ் சலாம்ஸ் போக்குவரத்துச் சேவையைச் சேர்ந்த லொறி ஒன்று கடத்தப்பட்டதை அடுத்தே இந்த முடிவு.

முறிகண்டிக்கு அண்மையில் வைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் இந்த லொறி கடத்தப்பட்டது.

லொறியில் வந்த பொருள்கள் வர்த்தகர்கள், பொதுமக்கள் உட்பட முப்பது தமிழர்களுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பகுதிகளில் படைகள் உஷார்

புதிய வழிமுறையில் ரோந்து சந்தேகமான இடங்களில் தேடுதல்

கொழும்பு, டிச. 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் பாதுகாப்புப் படையினருக்கு உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்துள்ளது.

புதிய வழிமுறைகளில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சந்தேகத்துக்குரிய இடங்களில் தேடுதல் வேட்டை நடத்துமாறும் தமிழ்ப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படைகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

உயர்தர பாதுகாப்பு அதிகாரிகளின் முக்கிய மாநாடு ஒன்று நேற்று இங்கு நடைபெற்றது. அந்த மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளைத் தொடர்ந்தே, தமிழ்ப்பகுதிகளில் உள்ள படையினர் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

போராளிகள் தாக்குதல்களை நடத்தத் தயாராவதாக பிரஸ்தாப மாநாட்டில் தெரிவிக்கப் பட்டதாம். அதைத் தொடர்ந்தே புதிய உத்தரவுகளை வழங்க முடிவு செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் உள்ள படைகளின் தலைமை அதிகாரிகள் நிலைமையை அனுசரித்து உடனுக்குடன் அனுகூலமான முடிவுகளை எடுக்க அதிகாரம் வழங்கவும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாம்.

தேடுதல் வேட்டையின்போது போராளிகள் கண்டுபிடிக்கப் பட்டால், அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரே பாத்திரவாளி என்ற முறையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் மாநாட்டில் ஆராயப்பட்டதாக அறிய வந்துள்ளது.

நேற்று நடந்த உயர் மட்ட மாநாட்டில் வேறு சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

தேடுதல் நடவடிக்கையில் ஆயுதப் படையினர் ஈடுபடும்போது பொது மக்கள் தகுந்த தகவல்களைக் கொடுக்கத் தூண்டும் வழிமுறைகள் பற்றியும் மாநாட்டில் ஆராயப்பட்டதாக அறியவந்துள்ளது.

பிந்திய செய்தி

துப்பாக்கி சமர் திருநகரில்

யாழ்ப்பாணம், டிச.11

கிளிநொச்சி, திருநகரில் நேற்று மாலை சுமார் ஆறு மணியிலிருந்து ஒரே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

போராளிகளும், ஆயுதப் படையினரும் நீண்ட நேரம் துப்பாக்கிச் சமர் புரிந்தனர் எனப் பின்னர் தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து திருநகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கண்ணி வெடியில் கவச வண்டி

ஆனையிறவு, டிச. 11

ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிக்கு சென்றுகொண்டிருந்த கவச வண்டி ஒன்று நேற்று மாலை கண்ணி வெடியில் சிக்கியது.

கண்ணி வெடியினால் படுகாயமடைந்த எட்டுப் பேர் அவசர சிகிச்சைக்காக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

செய்தி அச்சுக்குப் போகும்வரை உயிரிழந்தவர்களின் விபரம் எதுவும் தெரியவில்லை.

ஆனையிறவில் ரோந்து

யாழ்ப்பாணம் டிச. 11

ஆனையிறவுப் பகுதியில் நேற்று மாலை ஆயுதப் படையினர் ரோந்து புரிந்தனர். சுமார் 50பேர் வரை நடை பவனியாகச் சென்றதாக அறியப்படுகின்றது.

அவர்கள் ஒரு இளைஞனையும், இரண்டு யுவதிகளையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

நகரைக் கலக்கிய குண்டு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 11

நேற்றிரவு 12.45 மணியளவில் நகரைக் கலக்கும் வகையில் பெரிய குண்டுவெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது.

இந்தக் குண்டுவெடிப்பின் தாக்கம்பற்றி செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

கோட்டையிலிருந்து 7 இளைஞர் விடுதலை

இருவர் முஸ்லிம்கள்

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து 5 தமிழ் இளைஞர்களும் 2 முஸ்லிம் இளைஞர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

யாழ் செயலக அதிகாரி ஒருவர் அந்த இளைஞர்களை கோட்டைக்குச் சென்று அழைத்து வந்து உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

விடுவிக்கப்பட்ட ஏழு இளைஞர்களின் பெயர், விபரம் வருமாறு:

முத்தையா சத்திவேலு, முத்தையா பிரபாகரன், கைத்தின் பெர்னாண்டோ பேதுருப்பிள்ளை, முகமது சலீம் முஹின் ஜஹனி, அப்துல் காதர் புல்லபிக்காஅலி, மாணிக்கம் ரவிராஜா, கந்தன் வேலு ராஜேந்திரம்.

சுபநேரம்

11 - 12 - 1985
புதன்கிழமை
சுபநேரம்:
4-50 முதல் 6.20 வரை
ராகுகாலம்:
12-20 முதல் 1-50 வரை.
அமாவாசை விரதம்

சுவிஸிலிருந்து

இலங்கைத் தமிழரை வெளியேற்றாதீர்!

மன்னிப்புச் சபை கேட்கிறது

பேர்ன், டிச 10

அரசியல் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளை, சுவிட்சர்லாந்தில் இருந்து வெளியேற்ற வேண்டாம்.

சர்வதேச மன்னிப்புச் சபை, சுவிட்சர்லாந்து அரசாங்கத்தை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

தஞ்சம் அடைந்தவர்களை நிர்ப்பந்தமாக இலங்கைக்கு அனுப்பி வைத்தால் அவர்கள் அங்கு பழிவாங்கப்படுவார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை, சுவிஸ் அரசுக்கு அறிவித்துள்ளது.

இதனிடையில், தமிழ் அகதிகளை நாடு கடத்துவது இல்லை என்ற இடைக்காலத் தீர்மானத்தை சுவிஸ் அரசாங்கம் மீளாய்வு செய்து வருகின்றது.

4,500 இலங்கைத் தமிழர் அரசியல் தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டில் தங்கி உள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை

இந்திய அரசின் கண்டிப்பு அவசியம்

லோக சபையில் எதிர்க்கட்சிகள் குரல்

புதுடில்லி, டிச.10

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் இந்திய அரசாங்கம் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் லோக சபையில் நேற்றுக் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் நடக்கும் அட்டூழியங்கள் கவலைதருவனவாக உள்ளன. பிரச்சினை இப்போதைக்கு தீர்க்கப்படும அறிகுறிகளும் இல்லை. ஆகையால் இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மிக கண்டிப்பாக நடந்து கொள்வதுடன் விரைவான தீர்வுக்கும் வழி செய்ய வேண்டும்.

இவ்வாறு பல எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஏகோபித்த குரலில் கருத்துத் தெரிவித்தனர்.

சர்வதேச நிலைமை,இந்தியாவின் வெளிநாட்டுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



ஓம், ஓம், யாழ்ப்பாணம் எரிஞ்சது, யாழ்ப்பாணம் இடிஞ்சது என்ட வரிசையிலை யாழ்ப்பாணம் மணக்குது என்ற புதுச் சரித்திரம் படைக்கிற முயற்சியிலை தான் குப்பை டிராக்டர்களைக் கடத்தியிருப்பினமோ!

அரசுக்கு ராஜீவின் யோசனை

புதுடில்லி, டிச. 10

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்த யோசனைகளை இலங்கை அரசு நன்கு ஆய்வு செய்ய வேண்டும்.

இப்படி யோசனை தெரிவித்திருக்கிறார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இப்படிச் சொன்னார்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வதற்கு முதலில் அங்கு வன்முறைகள் நிற்க வேண்டும்.

இது விடயத்தில் நமது இந்திய அரசு இலங்கை அதிகாரிகளுடன் இடையறாது தொடர்பு கொண்டு வருகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனையை இலங்கை அரசு முதலில் ஆய்வு செய்யவேண்டும்.

தற்போது எங்களிடம் இரண்டு யோசனைகள் இருக்கின்றன. ஒன்று இலங்கை அரசு சமர்ப்பித்தது. மற்றது தமிழர் விடுதலைக் கூட்டணியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த இரண்டு அம்சங்களின் அடிப்படையில் நல்ல முன்னேற்றம் காணமுடியும்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை டாக்காவில் சந்தித்தபோது அவருடன் இந்த விடயம்பற்றி விவாதித்தேன்.

திரு. ராஜீவ் காந்தி இப்படி மேலும் கூறினார்.

தமிழ் மொழி அமுலுக்கு ஓர் அமைச்சர்; ஆனால்

தமிழனின் உயிரைப் பாதுகாக்க ஓர் அமைச்சர் இல்லையே!

தொண்டமான் ஆவேசம்

கொழும்பு, டிச. 11

தமிழ் மொழி அமுலுக்கென ஓர் அமைச்சர் இருக்கின்றார்.

ஆனால் தமிழனின் உயிரைப் பாதுகாக்க என்று எவரும் இல்லை.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு பேசினார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒரு தொகைப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்திருந்தது.

அந்தப் புத்தகங்களைக் கையளிக்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அந்த வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு சொன்னார்.

இலங்கையில் உள்ள இந்தியத்தூதர் திரு ஜே. என். டிக்ஸிட் புத்தகங்களை கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்குக் கையளித்தார்.

அமைச்சர் தொண்டமான் மேலும் சொன்னதாவது:-

இலங்கைத் தமிழருக்கு தமிழ் நாடுமட்டும் அல்ல முழு இந்தியாவுமே ஆதரவு அளிக்கின்றது.

பிரச்சினைகளைத் தீர்க்க இனியும் தலைவர்கள்மேல் நம்பிக்கை வைக்கக் கூடாது. அவர்களினால் ஒருபோதும் பிரச்சினைகள் தீர்க்கப்படமாட்டா.

எம்மால் துப்பாக்கி தடி கட்டிப் போராட முடியாது. நெஞ்சுறுதியும் துணிவும் இருந்தால் எம்மை யாரும் அசைக்க முடியாது.

தமிழ் மொழி அமுலுக்கு என்று ஒரு அமைச்சர் இருக்கின்றார்.

ஆனால் தமிழனின் உயிரைக் காப்பாற்ற என்று ஒருவரும் இல்லை. நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கவும் எவரும் இல்லை.

எனவே மக்கள் செயலற்று இருக்கக்கூடாது.

அனைவரும் ஒன்றிணைந்து ஒருமித்து குரல் எழுப்புவதன் மூலம் மக்களே பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் கூறி முடித்தார்.

6 டிராக்டர் கடத்தல்

நகரின் சுத்திகரிப்பு ஸ்தம்பிக்கும் நிலை

ஒப்படைக்க கோருகிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ்ப்பாணத்தில் நகர சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த 6 டிராக்டர்கள் இதுவரை கடத்தப்பட்டுள்ளன.

இவற்றைத் திருப்பி ஒப்படைக்குமாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

பொது மக்கள், வரியிறுப்பாளர்கள் ஆகியோரது பொதுச் சுகாதாரத்

(4 ஆம் பக்கம் பார்க்க(

அடுத்த ஆண்டு நெருக்கடி; எவ்வளவு காலம் பொறுப்பது?

இப்படிச் சொல்பவரும் கேட்பவரும் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 11

அடுத்த ஆண்டு நெருக்கடியானது. தற்போதைய நிலையை எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக்கொண்டு இருப்பது.

இப்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

'இனப்பிரச்சினைக்கான தீர்வு காணுவதில் கண்ட முன்னேற்றம் என்ன?' — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு திரு. ஜெயவர்த்தன சொன்னார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' ஆங்கிலத் தினசரிக்கு திரு. ஜெயவர்த்தன பேட்டி ஒன்று அளித்திருந்தார்.

டாக்காவில் இருந்து இலங்கை திரும்பிக்கொண்டிருந்த சமயம் விமானத்தில் வைத்து இப்பேட்டியை திரு. ஜெயவர்த்தன அளித்தார்.

பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: தீர்வு காணுவதில் கண்ட முன்னேற்றம் என்ன?

பதில்: அடுத்த ஆண்டு நெருக்கடியானது. தற்போதைய நிலையை எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக் கொண்டு இருப்பது?

அவர்களுக்குத் தீர்வு தேவையில்லை என்றால் போராளிகள் நசுக்கப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக அவர்கள் போர் தொடுக்கின்றார்கள். கடந்த சில மாதங்களில் ஆயுதப் படைகளை நாம் பலப்படுத்தி உள்ளோம்.

நாம் சமர்ப்பித்துள்ள நகல் செயல் திட்ட யோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மரீனா கடற்கரை மீனவர் தொழில் செய்ய அனுமதி

இடைக்கால உத்தரவு தொடரும் உயர் நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை டிச. 10

சென்னை மரீனா கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்க மீனவர்களை அனுமதிக்கும் சென்னை மேல் நீதிமன்ற இடைக்கால உத்தரவு தொடர்ந்து அமுலில் இருக்கும்.

சென்ற வாரம் இடம் பெற்ற சென்னை மரீனா கடற்கரைச் சம்பவம் தொடர்பான வழக்கு மனுவை விசாரணை செய்யும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் இவ்வுத்தரவை நேற்றுவழங்கினர்.

சுற்றுடல் பாதிப்படைவதாகக் காரணங் கூறி மரீனா கடற்கரை மீனவர்களின் வள்ளங்களைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இதற்கெதிராக மகளிர் உரிமை இயக்கமும் மற்றும் வேறு சில அமைப்புகளும் வழக்கு மனு தாக்கல் செய்திருந்தன.

யந்திரப்படகு மீனவர்களுக்கு உதவும் உள்நோக்குடனேயே இவ்வாறு செய்யப்பட்டதாக ஆட்சேபனை மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது

மனு மீதான விசாரணையை மேற்கொண்ட நீதியரசர்கள் மீனவர்களைத் தொடர்ந்து மீன் பிடிக்க வழங்கும் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தனர்.

மீனவர்களிடமிருந்து கைப்பற்றிய வள்ளங்களை அவர்களிடம் ஒப்படைக்குமாறு ஏற்கனவே இந்த நீதியரசர்கள் உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

திரையுலகில் சாதனை புரிந்தவர் எம். ஜி. ஆர்.

தமிழ்த் திரையுலகில் சரித்திரம் படைத்த டைரக்டர் திரு ப. நீலகண்டன். எம். ஜி ஆர்., சிவாஜி முதற் கொண்டு அனைத்து பிரபல்ய நடிகர்களின் படங்களையும் இயக்கியவர் அவர்.

அவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் பட அனுபவங்கள் பற்றி குறிப்பிடும்போது சொன்னதாவது:-

தினசரி சினிமா

''மக்கள் திலகம் எம். ஜி ஆர். நடித்த 17 படங்களை இயக்கிய பெருமை எனக்கு உண்டு. நடிப்பில் அவரது பாணி தனியானது. எந்தக்கோணத்தில் நின்று வசனம் பேசினால் ரசிகர்களைக் கவர முடியும் என்பதை நன்றாக அறிவார்.

கதை உருவாக்குதல், உரையாடல், வரைதல், பாடல்களுக்கேற்ற கட்டத்தை நிர்ணயித்தல், பாடல்களை அமைத்தல், இசையமைப்பு, ஒளிப்பதிவு, எடிட்டிங் லெம்பம் வாள் மோதல், மல்யுத்தம் —

குதிரைச் சண்டை, குதிரைச்சவாரி, டைரக்ஷன், தயாரிப்பு, விநியோகம் அத்தனை துறைகளிலு எம் ஜி. ஆர். ஒரு சிறந்த நிபுணர். திரையுலகில் சாதனை புரிந்தவர் அவர்.

சண்டைக் காட்சிகள் எம். ஜி. ஆர். படங்களில் அமைந்ததுபோல் வேறு எந்தப்படத்திலும் அமைவதில்லை. ஏனெனில் அத்தகைய காட்சிகள் எப்படி வகுக்கப்பட வேண்டும் என்று ஸ்டண்ட் மாஸ்டர்களுக்கே ஆலோசனை கூறும் ஆற்றல் எம். ஜி. ஆரிடம் பூரணமாகப் பொருந்தியுள்ளது.

'லொகேஷன்' என்னும் காட்சிப் பின்னணி இடங்களைத் தேர்வு செய்வதிலும் அவர் சமர்த்தர்.

அவரது பல துறைத் திறமைகள் அனைத்திற்கும் சான்றுகளாக ''நாடோடி மன்னன்'', ''உலகம் சுற்றும் வாலிபன்'' முதலான படங்களைக் குறிப்பிடலாம்.

திரையுலகம் என்றும் பெருமைகொள்ள வேண்டிய கலைக் காவலர் திரு எம். ஜி. ஆர். என்று சுருக்கமாகச் சொல்வது பொருந்தும். என்றார்.

அஸாம் தேர்தலில் 1247 வேட்பாளர்

கௌஹாத்தி, டிச 10

அஸாம் மாநில சட்டசபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் 1247 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் அரைவாசிப் பேர் சுயேச்சை வேட்பாளர்கள்.

இந்திரா காங்கிரஸ் 125 சட்டசபை ஆசனங்களுக்கும் 13 நாடாளுமன்ற ஆசனங்களுக்கும் போட்டியிடுகின்றது.

ஜனதா கட்சி 10 நாடாளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிடுகின்றது.

மதக் கட்டுப்பாடு சீனா தளர்த்துகிறது

பீகிங், டிச 10

மதங்கள் மீதான கட்டுப்பாட்டை சீனா தளர்த்தி உள்ளது.

இதன் காரணமாக மூடப்பட்ட பல கிறீஸ்தவ தேவாலயங்கள் மீண்டும் திறக்கப்படுகின்றன.

இருந்தும் வத்திக்கானுடன் தொடர்புகளைப் புதுப்பிக்கும் முயற்சிகளை பீகிங் நிராகரித்து உள்ளது.

வத்திக்கானுடனான தொடர்புகளை பீகிங் 30 ஆண்டுகளுக்கு முன்னரே துண்டித்துவிட்டது.

1979 இல் இருந்து தான் சீனா, மதங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தத் தொடங்கியது.

யுனெஸ்கோவில் கனடா தொடர்ந்து அங்கம் வகிக்கும்

ஒட்டாவா, டிச 10

யுனெஸ்கோ ஸ்தாபனத்தில் கனடா தொடர்ந்து அங்கம்வகிக்கும்.

கனடாவின் வெளியுறவு அமைச்சர் மொனிக் வெஸினா இப்படி அறிவித்தார்.

யுனெஸ்கோ அமைப்பில் செய்யப்படும் சீர்திருத்தங்கள் குறித்து தாம் திருப்தி அடைவதாகவும் அமைச்சர் சொன்னார்.

யுனெஸ்கோவில் இருந்து பிரிட்டன் விலகிக்கொண்டது குறித்தும் அமைச்சர் வருத்தம் தெரிவித்தார்.

யுனெஸ்கோவிற்கு வழங்கும் நிதி உதவியில் மாற்றம் ஏற்படாது என்றும் அமைச்சர் திருமதி வெஸினா கூறினார்.

யுனெஸ்கோவிற்கு வழங்கப்படும் நிதி உதவி வீண் விரயம் என்றும் மேற்கு நாடுகளுக்கு எதிராக அரசியல் ரீதியில் பாவிக்கப்படுகின்றது என்றும் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தேங்காய் லொறி கடத்தப்பட்டது

காத்தான் குடி, டிச. 11

தேங்காய் ஏற்றிவந்த லொறி ஒன்று தேங்காயுடன் கடத்தப்பட்டது. லொறியில் இருந்த 45 ஆயிரம் ரூபா பணம் அபகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று நாவற்குடா சந்தியில் நடந்தது.

காத்தான்குடி முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறி, நாவற்குடா சந்தைக்கு தேங்காய் ஏற்றி வந்தபோதே கடத்தப்பட்டது.

ரஷ்ய டாக்டருக்கு நோபல் பரிசு வழங்க எதிர்ப்பு

ஒஸ்லோ, டிச. 10

1985 ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதான பரிசுகளில் ஒன்று ரஷ்ய டாக்டர் ஒருவருக்கு வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சமாதானத்திற்கான நோபல்பரிசு இவ்வாண்டு அமெரிக்காவைச் சேர்ந்த பெர்னைட் லோன், யெவ்ஜெனி சாஸோவ் ஆகிய இருவருக்குக் கூட்டாக வழங்கப்படுகின்றது.

இப்பரிசைப் பெறுவதற்காக நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவுக்கு வாரமுடிவில் இருவரும் விஜயம் செய்கின்றார்கள்.

அப்பொழுது ரஷ்ய டாக்டரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. போட்டியாக ஆர்ப்பாட்டக்காரர்கள் ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டுள்ள ரஷ்ய மனோதத்துவ நிபுணர் ஒருவருக்குப் பரிசு வழங்கத் திட்டமிட்டுள்ளனர்.

ரஜ்னீஷ் சுவாமி புதிய நாடு தேடுகிறார்

பொன், டிச. 10

அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட பகவான் ரஜ்னீஷ், தனது ஆச்சிரமம் ஒன்றை அமைக்கப் புதுநாடு ஒன்றைத் தேடுகின்றார்.

மேற்கு ஜெர்மன் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே ரஜ்னிஷ்சுவாமி இதைத் தெரிவித்துள்ளார்.

என்னை விட்டுச்சென்றவர்கள் எல்லாம் மீண்டும் என்னிடம் வந்துவிட்டனர். என் மீது அன்பு செலுத்துகின்றனர்—இப்படி ரஜ்னிஷ் சுவாமி சொன்னார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு

லிபியத் தலைவர் கடாபி விஜயம்

அக்ரா, டிச. 10

லிபியத் தலைவர் முகமட் கடாபி, மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எட்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

முதலில் இரண்டு நாள் விஜயமாக கானாவின் தலைநகரை வந்தடைந்த கடாபியை கானாத் தலைவர் ஜெரிரோலிங்ஸ் வரவேற்றார்.

''அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கண்டு நாம் அஞ்சமாட்டோம்.

எத் தாக்குதலையும் சமாளிக்க லிபிய படைகள் தயாராக உள்ளன'' - இப்படி கடாபி சொன்னார்.

இரைச்சலிலிருந்து தொழிலாளரைப் பாதுகாக்க நடவடிக்கை

பிரஸ்ஸல்ஸ், டிச. 10

தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் அதிக இரைச்சலில் இருந்து தொழிலாளர்களின் காதுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சட்டம் ஒன்றுக்கு ஐரோப்பிய பொருளாதார சமூக அமைச்சர்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

85 டெசிபெல் இரைச்சலுக்குமேல் வெளியாகும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் காது பாதுகாப்புச் சாதனங்கள் வழங்கப்படவேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்துகின்றது.

நிலத்துக்கு அடியில் செல்லும் புகையிரதம் எழுப்பும் சத்தம் 85 டெசிபெல் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு பாரம் மிகுந்த லொறி எழுப்பும் சத்தம் 90 டெசிபெல்ஸ்.

இந்தச் சப்தம் தொழிற்சாலையில் ஏற்பட்டால் உடனடியாக சத்தத்தைக் குறைக்க வழி செய்யவேண்டும். இதைச் செய்ய முடியாவிடில் தொழிலாளர்களுக்கு உடனடியாக காது பாதுகாப்புச் சாதனம் வழங்கப்படவேண்டும். இப்படி அந்தச் சட்டம் கூறுகின்றது.

பிரெஞ்சு பிரதமர் பதவி விலகமாட்டார்

ஜனாதிபதி மித்தரண்ட் அறிவிப்பு

பாரீஸ், டிச 10

பிரெஞ்சுப் பிரதமர் லோறன்ட் வேபியஸ் இராஜினாமாச் செய்யமாட்டார்.

பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்ஸிஸ் மித்தரண்ட் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

போலந்து நாட்டுத் தலைவர் ஜருலஸ்கி, பிரெஞ்சுக்கு விஜயம் செய்தது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை முற்றியே பிரதமர் இராஜினாமாச் செய்ய முன்வந்ததாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

பிரதமர் இராஜினாமாவைச் சமர்ப்பித்து விட்டதாகபிரெஞ்சு நாட்டின் பிரபல நாளிதழ் லாமொண்டே செய்தி வெளியிட்டது.

குருக்களைக் காணவில்லை

நாகர் கோவில், டிச.11

மட்டக்களப்பு புல்லுமலை விநாயகர் ஆலயக் குருக்களைக் கடந்த சில நாட்களாகக்காணவில்லை. அவர்பற்றியதகவல்களைத் தந்துதவுமாறு அல்வாயிலுள்ள அவரது உறவினர்கள், பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவிடம் கேட்டுள்ளனர்.

யாழ். வைத்திய பீட கட்டடவேலை

கொக்குவில், டிச. 11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகவைத்தியபீடக் கட்டடவேலைகள் யாவும் அடுத்தாண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடைந்துவிடும்.

லலித் விஜயம்

யாழ்ப்பாணம், டிச. 11

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஞாயிறு வடமத்திய மாகாணத்திற்கு விஜயம் செய்தார்.

இராணுவ பொலீஸ் அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினர்.

மின்னேரியாவிற்கும் விஜயம் செய்து இராணுவ வீரர்கள் மத்தியில் உரையாற்றினர்.

மின்சார திருட்டை நிறுத்தாவிடில்

சுன்னாகம் இருளில் மூழ்கிவிடலாம்

மின்சார அத்தியட்சகர் எச்சரிக்கை

சுன்னாகம், டிச. 11

சுன்னாகத்தில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் தாமாக தமது தவறை உணர்ந்து திருத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் முழு சுன்னாகம் நகரும் விரைவில் இருளில் மூழ்கவேண்டியேற்படும். இந்த எச்சரிக்கையை இறுதி எச்சரிக்கையாக சகல சட்டவிரோத மின்பாவனையாளரும் ஏற்க வேண்டும்.

மின்சார அத்தியட்சர் திரு. மாணிக்கராஜா இவ்வாறு தெரிவித்தார்.

சுன்னாகத்தில் புதிய மின் மாற்றியை இயக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

மங்கலான மின்வெளிச்சத்தால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டதை நான் நன்கறிவேன்.

இன்று முதல் உடுவில் - சுன்னாகம் பகுதி மக்களின் தேவைக்கு பூரணத்துவம் வாய்ந்த மின் வலுவைக் கொடுக்கக்கூடியதாக புதிய மின்மாற்றியை இயக்கியமை பெரும் சாதனையாகும். இதற்காக உழைத்தோர் பாராட்டுக்குரியவர்களே.

இப்படி அவர் கூறினர்.

முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமி தமது தலைமையுரையில் மக்களின் நண்பனான மின்சாரத்தை எமது மக்களுக்கு தரவல்ல புதிய மின் மாற்றியைத் தந்த சகலருக்கும் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

யாழ். அபிவிருத்திச் சபையின் செயலாளர் திரு. பரமநாதன் பேசுகையில், மின்மாற்றியை எவ்வளவு சிரமத்துடன் அமைத்திருக்கிறார்களோ அதை விட முக்கியம் அதனைப் பாதுகாப்பதாகும் என்றார்.

''சட்ட விரோத மின்சார பாவனையைத் தடுக்கும்வரை மக்கள் தரமான வலுவுள்ள மின் சக்தியைப்பெறுவது கஷ்டமானது. எனவே சட்ட விரோத மின்பாவனையாளர்கள் தமது தவறை உணர்ந்து மின்சார களவாடலை நிறுத்த வேண்டும்'' என வைத்திய கலாநிதி ஆ. நடராஜா குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா பயிற்சி

பெற முடியாத நிலையில் பலர்

தாளையடி, டிச. 11

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் 'டிப்ளோமா'ப் பயிற்சி நெறியை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 25 மைல்கள் எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்தே புதிய 'டிப்ளோமா' பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்கள்கூட இந்நிபந்தனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

பரிசோதகர் நியமனம்

கொக்குவில், டிச.11

புதிய கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான நியமனங்கள் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்.

யாழ் கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள்

காங்கேசன்துறை, டிச 11

வடக்கில் உள்ள காச நோயாளர்களின் ஒரே புகலிடமாக விளங்கும் மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன.

★ இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை, முன்பு இருந்த வைத்திய அதிகாரி லீவில் சென்று பல மாதங்களாகியும் அவரது இடம் நிரப்பப்படவில்லை. ஆர். எம். பி ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகிறார்.

★ வைத்தியசாலையில் 10 தாதிகள் முன்பு கடமை புரிந்தனர். இப்போது 3 தாதிகள் தான் கடமையில் உள்ளனர். காலியான தாதிகளின் இடங்கள் நிரப்பப்படவில்லை.

★ இங்கு 10 வார்ட்டுகள் மட்டுமே செயல்படுகின்றன. ஏனையவை கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

★ வைத்தியசாலையின் பிரேத அறை சேதமடைந்து பிரேதங்களை வைக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

இதைவிட மருந்துத் தட்டுப்பாடு சுகாதார பாதிப்பு போன்ற குறைபாடுகள் இவ் வைத்தியசாலையில் காணப்படுவதால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

நோயாளர் துயர் துடைக்க ''வடமாகாண காச நோயாளர் அபிவிருத்திச் சங்கம்'' என்ற பெயரில் சங்கம் ஒன்று இங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சரியாக விலாசம் இடப்படாததால் வெளிநாட்டுக் கடிதங்கள் ''தூங்குகின்றன''!

யாழ்ப்பாணம், டிச 11

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களால் யாழ மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் சரியாக விலாசமிடப்படாததால் பல கடிதங்களை பட்டுவாடா செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் தபால் நிலைய அதிகாரி ஒருவர் 'உதயன்' செய்தியாளரிடம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ் மாநகர எல்லைக்குள் உள்ள வீடுகளுக்கு புதிய இலக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. பழைய இலக்கங்களும் உபயோகத்தில் இருக்கின்றன.

ஆனால் வெளிநாடுகளில் இருந்து வரும் சில கடிதங்களில் புதிய இலக்கம், பழைய இலக்கம் என்று எதுவும் குறிப்பிடப் படாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக, தினமும் நான்கு, ஐந்து கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படாமல் தபால் நிலையத்துக்கே திரும்பி வருகின்றன.

ஆகவே யாழ் மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுக்கு சரியான விலாசங்களை அனுப்பி, அந்த விலாசத்திற்கே கடிதங்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளவேண்டும்.

வெளிநாட்டில் உள்ளவர் கடிதம் அனுப்பவில்லையே என்று இங்கு காத்திருக்க, அவர் அனுப்பிய கடிதம் சரியான விலாசமில்லாததன் காரணமாக தபால் கந்தோரில் 'தூங்குகின்ற' விஷயம் அவருக்கு எங்கே தெரியப்போகின்றது.

இப்படி அந்த அதிகாரி சொன்னார்.

சிங்களவாடியில் நலன்புரி சங்கம்

மட்டக்களப்பு, டிச. 11

மட்டக்களப்பு சிங்களவாடி 4 ஆம் வட்டார மக்களின் நலன்களை மேற்பார்வை செய்வதற்காக இப்பகுதி பிரமுகர்களால் ''4 ஆம் வட்டார நலன்புரி சங்கம்'' என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் முன்னாள் மேயர் திரு. இரா. அம்பலவாணர் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

இராமநாதன் வரிசையில் கனகரத்தினம்

நல்லூர், டிச.11

தமிழர் சமுதாயத்தின் உயர்வுக்கு உழைத்த உத்தமர்களில் சேர். பொன். இராமநாதன் போன்ற ஒருவரே அமரர் ஆறுமுகம் கனகரத்தினமும்.

அவர்களைப்பற்றிப் பலரும் அறியக்கூடிய வகையில் ஆய்வுகள் செய்து நூல்கள் வெளிவரவேண்டும்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்புவிழாவிலும் நிறுவுநர் நினைவுதினத்திலும் கலந்துகொண்ட பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நீங்களும் வெளிநாடு செல்லலாம்!

- மேற்கு ஜேர்மனி
- பிரான்ஸ்
- இத்தாலி

எமது பிரதிநிதி உங்களைப் பாதுகாப்பாக இங்கிருந்து மாதம் இரு தடவை அழைத்துச் செல்வார்.

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
PETTAH.
T'Phone: 29148

மற்றும்
சகல விமான டிக்கட்டுகள், பாஸ்போட் பொண்ட், விசா என்பனவற்றிற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உதய சங்கற்பம்

எப்பொழுதும் பணி செய்யச் சித்தமாய் இரு.
சந்தர்ப்பத்தை நழுவ விடாதே.
ஆத்மபாவத்துடன் சேவை செய்.

- சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 24805
22073
11-12-85
த. பெ. 23

அடகு நகைகளை உடனே திருப்பிக்கொடு

வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளைகளின் முன்னால் மீண்டும் மறியல் போராட்டம் ஆரம்பமாகப்போகிறது. அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் தமது நகைகள் திருப்ப ஒப்படைக்கப்படும்வரை அடகு வைத்த பொதுமக்கள் காலவரையறையின்றி மறியல் போராட்டத்தை நடத்த இருக்கிறார்கள்.

அடகு நகைகளைத் திரும்பக்கொடுப்பதில், மக்கள் வங்கி காலம் தாழ்த்திவரும் விவகாரம் நீண்டகாலப் பிரச்சினை. நகைகள் திரும்பத் தரப்படும் எனப் பலதடவை வாக்குறுதிகள் வந்தபோதிலும் மக்கள் கைகளுக்கு அவை இன்னும் வந்துசேரவில்லை.

ஈட்டுப்பணம் திரும்பச் செலுத்தப்பட்ட உடனுக்குடன் நகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும், இந்த நம்பிக்கையுடன் தான் பொதுமக்கள், தாம் பெற்ற பணத்தை விடப் பலமடங்கு பெறுமதியான நகைகளை அடகு வைத்தார்கள்.

ஈட்டுப்பணத்தைச் செலுத்திப் பல மாதங்கள் சென்றும் நகைகளைப் பெறமுடியவில்லை என்றால் அவர்களுக்குப் பெருநஷ்டம். நகைகளையும் இழந்து பணத்தையும் இழந்த நிலை.

யாழ்ப்பாணத்து மக்கள் சேமிப்பதில் கைதேர்ந்தவர்கள். இன்றைக்கு அரை வயிற்றுக் கஞ்சி குடித்தாலும் நாளைக்கும் வேண்டும் என்ற முன்னேக்குடன் சேமிப்பவர்கள். அப்படிக் கஷ்டப்பட்டுச் சேமிக்கும் பணத்தை நகையாக மாற்றுபவர்கள். பணமாக இருந்தால் செலவாகிவிடும், நகையாக இருந்தால் பொருளாகவே நிலைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

யாழ்ப்பாணத்து மக்களில், பரம ஏழை வீட்டிலும் ஒரு நகையாவது இருக்கும். அதனைப் பார்த்து அவன் பணக்காரன் என்று மதிப்பிடலாமா? அவனுக்கு நகை அவசரம் தேவையில்லை, ஆறுதலாகக் கொடுக்கலாம் என்று நினைக்கலாமா?

கஷ்டப்பட்டுத் தேடிய நகைகளை, வங்கியில் அடகு வைத்தவர்களில் பெரும்பாலானோர் விவசாயப் பெருமக்கள். நெல் விதைக்கவும் களை பிடுங்கவும் சூடு அடிக்கவும் அவர்களுக்குத் திடீர் திடீர் எனப் பணம் தேவைப்படும். அப்போது அவர்களின் வரப்பிரசாதம் நகை தான். அதே போன்று பண வசதி குறைந்தவர்கள் தங்கள் திடீர் தேவைகளுக்குப் பணம் பெறுவதற்கு நம்பியிருப்பதும் தம்மிடம் உள்ள ஒரு சில நகைகளைத் தான்.

அடகு வைத்தவர்கள் அல்லற்படுகிறார்கள். அவர்கள் பணக்காரர்கள் அல்லர் ஏழைகள். இதனை மக்கள் வங்கி நிர்வாகம் உணர வேண்டும்.

ஈட்டுப்பணம் திரும்பச் செலுத்தப்பட்டதும் நகைகளைத் தருவதாகத் தாம் கொடுத்த உத்தரவாதத்தை வங்கி காப்பாற்ற வேண்டும். பாதுகாப்புக் காரணங்களைக் கூறி காலத்தைக் கடத்த முடியாது.

அடகு வைத்தோர் மறியல் போராட்டம் செய்வதால் வங்கிகளின் வேலைகள் பாதிக்கப்படுகின்றன. அதனால் வங்கி வாடிக்கையாளருக்கும் கஷ்டம், நிர்வாகத்துக்கும் நஷ்டம். இது ஏன் மக்கள் வங்கியின் தலைமைப் பீடத்துக்குப் புரியவில்லை.

பணம் செலுத்தியவர்களின் நகைகளை திரும்பக் கொடுப்பதில் நீண்ட தாமதம் காட்டுவதனை எந்தக் காரணம் சொல்லியும் நியாயப்படுத்த முடியாது. எனவே அடகு நகைகளை உடனே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பதிவு செய்யாத பட்டதாரிகளுக்கு
இன்னும் நியமனம் இல்லை

திருநெல்வேலி, டிச11

1976ஆம் ஆண்டு வெளியேறிய கலைப்பட்டதாரிகள் பலர் இளைஞர் வேலைவாய்ப்பு திட்டமிடல் பிரிவில் தம்மைப் பதிவு செய்யத் தவறியதால் இன்று வரை ஆசிரிய நியமனம் பெற முடியாத அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

தற்பொழுது கொழும்பில் 1983, 1984ஆம் ஆண்டு வெளியேறிய கலைப்பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

ஆனால் கல்விச் சேவை ஆணைக்குழு கடந்த காலங்களில் பதிவு செய்யத் தவறிய பட்டதாரிகளின் பரிதாப நிலைபற்றி கவனம் செலுத்தாமலிருப்பது பாதிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு கவலையை அளித்துள்ளது.

தற்பொழுது நடைபெற்று வரும் நேர்முகப் பரீட்சையில் முன்னர் பதிவு செய்யத் தவறிய பட்டதாரிகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வன்செயல்களினால்
வாழ வழியற்றோருக்கு
புனர்வாழ்வு வசதி

கா. விஸ்வலிங்கம்

(தலைவர், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்)

1983 ஜூன் மாதத்தில் இன வன்செயல்கள் வெடித்ததிலிருந்து மிகக் குறைந்த மதிப்பீட்டின்படி சுமார் நாலாயிரம் தமிழர் உயிரிழந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

அவர்களுள் பாதி எண்ணிக்கையினர் பற்றியே முக்கிய விவரங்களைச் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. ஏனையோர் பற்றிய விவரங்களை எப்பொழுதாவது திரட்ட முடியுமோ என்பதும் ஐயமே.

உயிரிழந்தோரில் ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டோர் தாமே தமது குடும்பத்தைப் பராமரிப்பவர்களாக இருந்துள்ளனர். இவர்களின் மறைவினால் இவர்களில் தங்கி வாழ்ந்தோரின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிட்டது.

வன்செயல்களால் உடல் ஊறுபட்டு, உழைக்கும் ஆற்றலை முற்றாக இழந்தோரும் வாழ்க்கைக்கான வருவாய் தரும் வளங்களை முற்றாக இழந்தோரும் புனர்வாழ்வு நோக்கங்களைப் பொறுத்தமட்டில் கொலையுண்டோருடன் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றனர்.

சமுதாயம் அவர்களுக்குத் துணை செய்ய முன்வராவிடில் அவர்கள் அனைவரும் விதிவிலக்கின்றி இரந்துண்டு வாழ நேரிடும்.

ஏதிலிகளான இவர்களுக்கு ஆதரவும் புனர்வாழ்வும் நல்கும் பணியை 1983 அக்டோபர் மாதத்திலிருந்து அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஏற்றுக்கொண்டது.

சார்ந்து வாழ்வோரின் வயது திறன், நாட்டம் என்பவற்றுக்கேற்ப புனர்வாழ்வு வெவ்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

சிலர் பண்ணைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். சிலர் தையல் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். சிலர் சில்லறை விற்பனைக் கடைகளை அமைத்தனர். சிலர் சொந்த நிலத்தில் அல்லது குத்தகை நிலத்தில் விவசாயத்தை மேற்கொள்ள வழி செய்யப்பட்டது. சார்ந்து வாழ்வோர் மிகவும் சிறியவர்களாகவும் வேறு உதவியில்லாதவர்களாகவும் இருந்தால், மேற்கூறப்பட்ட முறைகளில் உதவ முடியாதபோது, நிதி நிறுவனமொன்றில் பணத்தை வைப்புச் செய்து சார்ந்து வாழ்வோருக்கு அதிலிருந்து மாதந்தோறும் வட்டி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

200 குடும்பங்களுக்கு வாழ்வு

இவர்களுக்கு ஆதரவும் புனர்வாழ்வும் வழங்குவதற்கான நிதி, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள மனித நலநாட்டமுள்ள நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டது,

இத்தகைய நிதியிலிருந்து இதுவரை இருநூறு குடும்பங்களுக்கு நாம் வாழ்க்கைக்கான வருவாயை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

மேலும் நூறு குடும்பங்களுக்கு இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தொடக்கத்தில் ஒரு குடும்பத்தின் நல்வாழ்வுக்காக, வழங்கப்பட்ட, நிதியிலிருந்து ரூபா 20,000 |– செலவிட முடிந்தது. ஆனால் இன்று இது ரூபா13,000 ஆகச் சுருங்கி விட்டது. கொலையுண்டவர்களின் எண்ணிக்கை நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாகி விட்டதாலும் எமது புரவலர்கள் வழங்கிய நிதியில் மட்டுமே தங்கியிருக்க நேர்ந்ததாலும் இவ்வாறு தொகை குறைய நேர்ந்தது.

'மக்கள் பணியே மகேசன் பணி' என நம்பும் மேற்கு நாட்டு மக்களின் கொடையில் மட்டும் நாம் தங்கியிருக்காது எமது நெறி எமக்குப் போதிக்கும் தத்துவங்களின்படி நாமும் வாழ்ந்து ஏதிலிகளின் வாழ்வுக்கு உதவ வேண்டும்.

மேலும் விதியின் சதிக்கு இரையாகிவிட்ட இவர்கள் தாமும் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்கள் போல வாழத் தமது சொந்தச் சகோதரர்களின் ஆதரவை எதிர்பார்க்கும் உரிமையுள்ளவர்கள். அவர்களுக்குத் துணை செய்ய வேண்டிய புனித கடமை எமக்கும் உண்டு.

தங்களிடமிருந்து நாம் கேட்கும் உதவி தர்மத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. இவர்கள் ஏன் தங்கள் உயிர்களைக் கொடுத்தார்கள்? சிந்தியுங்கள்! நாமும் எமது பிற்சந்ததியும் இந்நாட்டில் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்கே.

இவர்களுக்கு நாம்செய்யும் கைம்மாறென்ன? இவர்களின் மனைவிகளும், பிள்ளைகளும் பிச்சை ஏற்று உயிர் வாழ்வதை நீங்கள் அனுமதிப்பதா? இக்குடும்பங்களுக்கு வாழ வழி வகுத்துக் கொடுப்பது எம் எல்லோரினதும் புனித கடமை மட்டுமல்ல நன்றிக்கடனைச் செலுத்தும் நற்பண்புமாகும்.

இரப்போர் இல்லாத சமுதாயம் வேண்டும்

இந்த நல்ல பணிக்கு இயன்ற அளவில் நிதி வழங்கி இரப்போர் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க நாமும் துணை செய்தோம் என்று பெருமைப்படக்கூடியவாய்ப்பு உண்டு. அதனைச் செய்யக் கூடிய செல்வர்களும் வளம் மிக்க குடும்பங்களும் சமூக, சமய நிறுவனங்களும் தொழிலதிபர்களும் வணிகச் செல்வர்களும் பெருந்தொகையான வேறு பல நிறுவனங்களும் எம்மிடையே உள்ளனர் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

ஒரு குடும்பத்திற்குப் புனர் வாழ்வு அளிக்க 15,000 ரூபாவிலிருந்து 20,000 ரூபாவரை தேவைப்படும். இந்தத் தரும காரியத்தினால் தங்களுக்கு ஏற்படக்கூடிய நற்பலனை உணர்ந்து கொள்ள முடியுமானால், இந்தக் கொடையை வழங்குதல், நாம் மேலே குறிப்பிட்ட பெருமக்களுக்கோ, அமைப்புக்களுக்கோ இயலாத காரியமாக இருக்க மாட்டாது என்பது உறுதி.

எமது மொழியிலுள்ள உயர்ந்த குறிக்கோள்களும் நாம் கடைப்பிடிக்கும் சமயத்திலுள்ள உயர்ந்த நீதிகளைத்தும், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எமக்கு நன்மை விளைக்க ஏழைகளாக்கப்பட்டவர்களுக்கும், துணையற்றவர்களுக்கும் ஈதல் வேண்டுமென்றே அறங்கூறுகின்றன.

மூளைக் காய்ச்சல் அறிகுறி

★ வாந்தி ★ காய்ச்சல் ★ தலைவலி ★ வலிப்பு

யாழ்ப்பாணம் டிச. 11

- ✶ வாந்தி
- ✶ கடுமையான காய்ச்சல்
- ✶ தலைவலி
- ✶ வலிப்பு

அனுராதபுரம், சிலாபம்பகுதிகளில் பரவிவரும் மூளைக் காய்ச்சலின் அறிகுறிகள் தான் மேற்கண்டவை.

இந்த மூளைக்காய்ச்சல் 'ஜப்பான் பி – என்சபெலிடிஸ்' என்று அடையாளங் காணப்பட்டுள்ளது.

நோயாளியைச் சரியான முறையில் பராமரிப்பது முக்கியமானது. அது குணமடைவதையும் துரிதப்படுத்தும்.

உலகிலேயே இந்த நோய்க்கு மருந்து கிடையாது.

மேற்கண்டவாறு சுகாதார அமைச்சின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும்சொன்னதாவது;

இக் காய்ச்சலினால் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட ஒருவர் குணமானாலும் அவரது மூளை சிரமமாகப் பாதிக்கப்பட்டிருக்கும்.

பலவீனமானவர்களைத் தான் இலகுவில் இக் காய்ச்சல் பீடிக்கும்.

பலசாலிகள் ஆரம்பக் கட்டத்திலேயே குணம் அடைந்துவிடுவர்.

அதுவும் பனடோல் அல்லது ஆஸ்பிரின் குளிகைகளைப்பாவித்தே குணமடைந்துவிடுவர்.

நோயாளிகுணமடைய 2 முதல் 7 நாட்கள் செல்லும்.

நுளம்பு தான் இக் காய்ச்சலுக்கு முழுக் காரணம்.

இப்படிச் சுகாதார அமைச்சுப் பேச்சாளர் சொன்னார்.



பொய்யாமொழி

குறள்:
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பொருள்:
பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்.

அம்பாறை ஆள் கடத்தல்
நடவடிக்கை முற்றுப்புள்ளி

ஒலிபெருக்கி மூலம் உண்மைநிலை அறிவிப்பு

அம்பாறை டிச, 11.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பகுதியைச் சார்ந்த சில தமிழ் முஸ்லிம் கிராம மக்களிடையே திடீர், திடீரென ஏற்பட்டுவந்த பதற்ற நிலை தணிந்து தற்பொழுது பூரண அமைதி நிலவுகிறது.

காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலைக்குக் காரணமாக இருந்த ஆள் கடத்தல் சம்பவங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பரஸ்பரம், கடத்தப்பட்டவர்கள் பலர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், இரு சமூகத்தவரிடையேயும் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநிறுத்தும் வண்ணம் எடுக்கப்பட்ட பகீரத முயற்சிகளின் பயனாகவும் தற்பொழுது பூரண அமைதி ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தமிழ் முஸ்லிம் கிராமங்களின் முக்கியஸ்தர்கள் தத்தமது பகுதி மக்களுக்கு சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் ஒற்றுமை பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

இதன் பயனாக அச்சநிலை நீங்கி இருசாராரும் தமது வழமையான கருமங்களை மேற்கொண்டு வருகிறார்கள். தடைப்பட்டிருந்த, கல்முனைக்கும் அக்கரைப்பற்றுக்குமிடையிலான தனியார் போக்குவரத்துச் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கல்வி மூலவள நிலையம் இலவச வகுப்பு நடத்தும்

பருத்தித்துறை. டிச.11

உடுப்பிட்டி கல்வி மூலவள நிலையம் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் பொருட்டு பிரவேச, பாலபண்டித, பண்டித, சைவப்புலவர் வகுப்புக்களை இலவசமாக நடத்தும்.

இலவச வகுப்புகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள ஆசிரியர்கள், ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்பில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோர் வகுப்பில் அனுமதிக்கப்படுவார்கள்.

குப்பை டிராக்டர் கடத்தல்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான குப்பைகள் கொட்டும் டிராக்டர் சனிக்கிழமை காலை கடத்தப்பட்டது.

குப்பைகளைக் கொட்ட காக்கை தீவுக்குச் சென்ற போது, இனந்தெரியாத நபர்கள் ஆயுதங்களுடன் வந்து டிராக்டரைக்கடத்திச் சென்றனர் என்று பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாநகர சபையின் இன்னொரு டிராக்டர் வியாழன் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

பொதுமக்கள் நன்மை கருதி டிராக்டர்களைத் திருப்பித்தரும்படி மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அவசர உதவி கோருகிறது

யாழ்ப்பாணம், டிச 11

பரவிவரும் மூளைக் காய்ச்சலை கட்டுப்படுத்த அவசர உதவி வழங்கவும். உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இலங்கை அரசாங்கம் இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு சுகாதார நிறுவனங்களுடனும் இது பற்றி இலங்கை அரசு பேசி வருகிறது.

மண்டைதீவில் நிதிசேகரிப்பு

திருநெல்வேலி டி ச. 11

கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள தமிழ மகளிர் அவை அகதிகள் முகாமைச் சேர்ந்த தொண்டர்கள் சிலர் மண்டைதீவுப் பகுதியில் தற்பொழுது நிதி சேகரித்து வருகிறார்கள்.

இவர்களுக்கு போதியளவு நிதி வழங்கி உதவுமாறு மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. என். இராமச்சந்திரன் இப்பகுதி பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

சீனக் கப்பல்கள் வருகின்றன

யாழ்ப்பாணம், டிச 11

சீனக் கடற்படையின் இரண்டு கப்பல்கள் டிசம்பர் 18ஆம் திகதி கொழும்புத் துறைமுகம் வருகின்றது.

டிசம்பர் 21 வரை கப்பல்கள் தங்கியிருக்கும்.

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இக் கப்பல்கள் வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கணவன்மார், பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள்

பெண்கள் கதறி அழுது முறையிட்டனர்

பாரதிபுரத்தில் பரிதாபம்

கிளிநொச்சி, டிச 11

''கைது செய்யப்பட்ட கணவன்மாரையும், பிள்ளைகளையும் மீட்டுத் தாருங்கள்'' இவ்வாறு கண்ணீர் மல்கி கதறினர் கிளிநொச்சி பாரதிபுரம் மக்கள்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தூது கோஷ்டி பாரதிபுரம் சென்றபோதே இந்தச் சம்பவம் நடந்தது.

கடந்தமாதம் கிளிநொச்சி பாரதிபுரத்தை இரவோடிரவாகச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கு வைத்துக் கைது செய்த 11 பேர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

இவர்கள் கோட்டை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலமைப் பரிசில் பெற்றனர்

அச்சுவேலி டிச.11

அச்சுவேலி மகாவித்தியாலய மாணவர்கள் நான்கு பேர் 5 ஆம் வகுப்புப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

விஜிதா கந்தசாமி, சுமந்தினிசிவக்கொழுந்து சிறீமோகன், சனகராசா, முரளிதரன் சுப்பிரமணியம் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

வித்தாரம்

என்ன முரளித் தம்பி, எங்கையோ நீண்ட தூரம் போய் வந்த மாதிரி இருக்கு. பயணக் களைப்பாக்கும். நல்லா வாடிப்போனாய்.

அட, நான் உன்னைப் பாத்துச்சொல்லுறதை நீ எனக்கே திருப்பி விடுறாயாக்கும். நீ கண்டுபிடிச்சதும் சரி தான்.

ஒருக்கா கமப் பக்கம் போக வேணும் எண்டு ஒரு எண்ணம் வந்த உடனை அங்கை திடீரென்று புறப்பட்டனான். கிளிநொச்சியிலை ஆக ஒரு நாள் மட்டும் தான் தங்க முடிஞ்சுது.

கிளிநொச்சி பழைய கிளிநொச்சியில்லை யடா தம்பி. நகரம் அர்க்கெட்டுப் போய்க் கிடக்குது. நரகமா மாறிற தறுவாயிலை நிண்டு அது தத்தளிக்குது.

சந்தைக்குப் பக்கத்திலை, பொலிஸ் ஸ்டேசன் அருகாலை இருந்த கடைகண்ணி எல்லாம்இப்போ காலி. நகரமே வெறிச்சோடின மாதிரித்தான்.

அது மட்டுமே, ராணுவ பொலிஸ் கூட்டு முகாம் விஸ்தரிக்கப்படுமோ எண்டும் சனங்கள் பயப்படுகினம். ஒரே விஸ்தரிப்பு வேலையள் தானும் நாளுக்கு நாள் ஒவ்வொண்டு ஒவ்வொண்டாக் கூடுதாம்.

இப்ப இருக்கிற முகாம் விஸ்தரிக்கப்படுகிறதை விட, பிறகும் ஏதாவது புதிசா அந்த இடத்திலை வந்து முளைக்குமோ எண்டும் சனம் ஏங்குது.

அப்பிடி ஒரு புதுசு அங்கை இடம் பிடிச்சால் கிளிநொச்சி ரயில் நிலையமும் இடம் மாறும் எண்டுஒரு பேச்சு. உதுகளை நம்பவும் முடியாது. நம்பாமல் இருக்கவும் முடியாது.

அது மட்டுமே, பட்டணத்திலை உள்ள கவுண்மேந்துக் கட்டிடங்களிலையும் அவை கை வைச்சாலும் யார் கேட்கிறது? உந்தமட்டத்திலை போனா கிளிநொச்சி வேறை உலகமாக மாறினாலும் அதிசயப்படுறதுக்கு ஒண்டுமில்லை.

அதுக்குப் பிறகு என்ன கமக்காரர் தங்கடை விவசாயத்தைக் கைவிட வேண்டியது தான். விளைபொருள்களைக் கஷ்டப்பட்டு வேளாண்மை செய்துபோட்டு யாருக்கு விக்கிறது? எந்தச் சந்தைக்குக் கொண்டு போறது?

கமம் செய்யாட்டால் வருமானம் இல்லாட்டால் சனம் என்னத்தைச் சாப்பிடுறது?

இந்த விஷயங்களை எல்லாம் ஏன் அவை யோசிக்கினம். தங்கடைபாதுகாப்பைப் பலமாக்கினால் அவைக்குப் போதும் தானே!



அச்சேறுகின்றது! புது நூல்!!
மழலைத் தமிழ் அமுதம்
—அரிவரிப் புத்தகம்—
1986ஆம் ஆண்டு புதிய பதிப்பு
மூவர்ண அட்டை
சிறுவர்களுக்கேற்ற சிறந்த வழிகாட்டி, பாலர் பாட்டுக்களும் படங்களும் பெரிய எழுத்துக்களில் வண்ணக்கலவில் அச்சாகின்றன.
ஆசிரியர்: இளஞ்சைவப் புலவர்
இரா. ஸ்ரீதரன்
விரைவில் எதிர்பாருங்கள் !

உதயன்
11 – 12 – 1985

விற்பனையாகின்றது!
பாலர் கல்வி நூல்கள்
1, குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்
(அரிவரிப் புத்தகம் -வண்ணப் பதிப்பு)
2. பாலர் மணி வாசகம்
(முதலாம் தரம் - வண்ணப் பதிப்பு)
ஆக்கம்:
இளஞ் சைவப் புலவர் இரா. ஸ்ரீதரன்
கிடைக்கும் இடம்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

திருமலை அகதிகளுக்கு டிச. 31 வரை மட்டுமே நிவாரண உதவி

வீடுகளில் உள்ளவர்களுக்கு 15 ஆம் திகதியுடன் நிறுத்தம்

நல்லூர், டிச.11

யாழ். குடா நாட்டில் முகாம்களில் உள்ள திருகோணமலை அகதிகளுக்கு டிசம்பர் 31 வரை மட்டுமே அரசாங்கம் நிவாரணம் வழங்கும். வீடுகளில் உறவினர்களுடன் தங்கியுள்ள திருமலை அகதிகளுக்கு டிசம்பர் 15-ஆம் திகதியுடன் நிவாரணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுவிடும்.

வீடுகளில் தங்கி உள்ள திருமலை அகதிகள் முகாம்களில் வந்து தங்கினால் அவர்களுக்கும் அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவிகள் டிசம்பர் 31 வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 3046 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக யாழ்ப்பாணத்தில் உள்ளனர்.

முகாம்களில் தங்கியுள்ள திருகோணமலை அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குவது பற்றி டிசம்பர் மாதக் கடைசியில்தான் முடிவு செய்யப்படும் என்று தெரிய வருகின்றது.

அரசாங்கம், நிவாரண உதவிகளாக இலவச அரிசி, மா, சீனி, ஆகியவற்றையே வழங்குகின்றது. 5பேரைக்கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வாரம் தோறும் 125 ரூபாவுக்கு உட்பட்ட பொருள்களே இலவசமாக வழங்கப்படுகின்றன.

நாவற்குழி ஓய்ந்தது

நல்லூர், டிச.11

நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரை அடுத்து நாவற்குழி பகுதியில் தொடர்ந்து பதற்ற நிலை நிலவுகிறது.

இ. போ. ச. பஸ்கள், மினிவான்கள், லொறிகள் உட்பட சகல வாகனப் போக்குவரத்துக்களும் நேற்றுக்காலை கோப்பாய் —கைதடி வீதி வழியாகவே இடம்பெற்றன.

நாவற்குழிப் பகுதியில் மக்கள் நடமாட்டமும் குறைவாகவே இருந்தது. அந்தப் பகுதி ஓய்ந்து போய் வெறிச்சோடிக் காணப்பட்டது.

காங்கேசனில்....:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நடந்த சிறிது நேரத்தின் பின்னர் இராணுவம் காங்கேசன்துறைக்கும் — மாவிட்டபுரத்துக்கும் இடைப்பட்ட இடங்களில் சென்று தேடுதல் வேட்டை நடத்தியது. நேரம் செல்லச் செல்ல வானத்தை நோக்கிச் சுட்டவாறே இராணுவத்தினர் சென்றதாக அறிவிக்கப்பட்டது. அப்பகுதியில் இரவு நெடுநேரம் வரை துப்பாக்கி வேட்டுச் சத்தமாக இருந்தது.

இச்சம்பவத்தை அடுத்து நேற்று மாலை அநுராதபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்று சுன்னாகத்துடன் நிறுத்தப்பட்டது.

யாழ், - ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மூன்று முஸ்லீம்களுக்கும் சொந்தமானவையாகும்.

இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் மற்றொரு முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான லொறி கொழும்பிலிருந்து பொருள்களை ஏற்றி வருகையில் கடத்தப்பட்டது என்பதும்–

அதனையடுத்து இதேபோன்று கொழும்பு–யாழ் லொறிச்சேவை இடைநிறுத்தப்பட்டது என்பதும் தெரிந்ததே.

அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர்களின் தலையீட்டையடுத்து கடத்தப்பட்ட அந்த லொறி மீட்கப்பட்டது.

அதன் பின்னர் அப்போது இடைநிறுத்தப்பட்டிருந்த லொறிச் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இன்னொரு லொறி கடத்தப்பட்டு பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதை அடுத்து மீண்டும் லொறி சேவை இடை நிறுத்தப்பட்டிருக்கிறது.

இக்கட்டான காலகட்டத்தில் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் யாழ் பகுதி மக்களுக்கு இந்தச் சேவையை தாங்கள் செய்துவருவதாகவும்–

இதனைப் புரிந்து கொள்ளாமல் லொறியைக் கடத்துவது தவறு என்றும் முஸ்லீம் போக்குவரத்து ஒன்றிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட லொறியும் பொருள்களும் விடுவிக்கப்பட்டால் மட்டுமே லொறிச்சேவையை மீள ஆரம்பிப்பது குறித்து புனராலோசனை செய்வது என தாங்கள் முடிவு செய்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

விளையாட்டரங்கு

யாழ். மாவட்டத்தில்

கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை மூலம் தெரிவு

யாழ்ப்பாணம். டிச.11

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான தராதரப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் இம்முறை தமிழிலும் விடை எழுதுவதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வருடமும் புதிய மத்தியஸ்தர்களைச் சேர்ப்பதற்கானபரீட்சை நடைபெற்றது. இருபதுக்கும் மேற்பட்டவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

பரீட்சை கடுமையாக இருந்தாலும், போதிய நேரம் ஒதுக்கப்படாமையாலும் ஒருவரைத் தவிர மற்றைய அனைவரும் பரீட்சையில் தேறவில்லை.

இம்முறை தகுதியான அனைவரும் சித்தியடையக்கூடிய வகையில் வினாத்தாள் அமைக்கப்படும் என சங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் சங்கத்தின் உபசெயலாளர் திரு.எஸ். உமாகாந்தனுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

நகரின் சுத்தி,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பேணும் பொருட்டே யாழ்ப்பாண மாநகரசபை நகரசுத்தி, மலசுத்திகரிப்பு வேலைகளை பலத்த சிரமங்களின் மத்தியில் நிறைவேற்றி வருகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு, உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு போன்ற நிர்ப்பந்தங்கள் ஏற்பட்ட போதிலும் அத்தியாவசிய சேவைகளை தடையின்றித் தொடர வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாண மாநகரசபையை எதிர்நோக்கி உள்ளது.

இச்சபைக்குச் சொந்தமான ஐந்து டிராக்டர்கள் கடத்தப்பட்ட நிலையிலும் நகரசுத்தி வேலைகளை பலத்த சிரமங்களுக்கு மத்தியில் இச்சபை நிறைவேற்றிவருவது அறிந்து உணரப்பட்டதாகும்.

இப்படியான இச்கட்டான நிலையின் மத்தியில் சபைக்குச் சொந்தமான மற்றுமொரு டிராக்டர் மூன்று நாட்களுக்கு முன்பு கடத்தப்பட்டிருப்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.

கடத்தப்பட்ட டிராக்டர்கள் திரும்ப ஒப்படைக்கப்படாதவிடத்து இந்நகரின் அத்தியாவசிய சுகாதார சேவையான நகரசுத்தி சேவை ஸ்தம்பிதம் அடையக்கூடுமெனப் பீதியடைகிறேன். தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் உண்டு.

ஆகவே, டிராக்டர்கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் பொதுநல நோக்குடன் அவற்றை இச்சபையிடம் உடன் ஒப்படைக்கும்படி வெகு தயவாக வேண்டுகிறேன்.

மாநகர மக்களின் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படாது காக்கும் பெரு நோக்குடன் மேற்படி டிராக்டர்களை சபையிடம் திருப்பி ஒப்படைப்பதில் தமது பொது நலன் பேணும் பாங்கைச் சம்பந்தப்பட்டோர் காட்டுவார்கள் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இப்படி யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு

திருநகர் சம்பவமும்

மற்றும் பலவும் விசாரணை

கிளிநொச்சி டிச. 11

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர். திருநகர் சம்பவம் உட்பட பல சம்பவங்கள் அப்போது விசாரிக்கப்பட்டன. கண்காணிப்புக் குழு முன் 7 பேர் சாட்சியம் அளித்தனர்.

திருநகரில் நடந்த சம்பவம் பற்றி மட்டுமே விசாரிக்க கண்காணிப்புக் குழுவினர் முதலில் திட்டமிட்டிருந்தனர். கிளிநொச்சி பிரஜைகள் குழு விடுத்த வேண்டுகோளை அடுத்து ஏனைய சம்பவங்களும் விசாரிக்கப்பட்டன.

மேற்கண்ட விவரங்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன.

பிரஜைகள் குழுக் கூட்டத்தில் அதன் தலைவர் டாக்டர் கே. சுப்பையாவும் செயலாளர் திரு. ரி. ஸ்ரீஸ்கந்தராசாவும் மேலும் தெரிவித்ததாவது:-

நமக்குத் தந்த குறுகிய கால அவகாசத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன் ஏழுபேருடைய சாட்சியங்களை மட்டும் நெறிப்படுத்தக் கூடியதாகவிருந்தது. திருநகரில் 4 பேரும், பாரதிபுரத்தில் ஒருவரும், பிரமந்தனாற்றில் கணவனைப் பறிகொடுத்த 16 வயது இளம்பெண் ஒருவரும், கிளிநொச்சி நகர வர்த்தகர் ஒருவரும் சாட்சியமளித்தனர்.

கிளிநொச்சி பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக செல்வோரின் அடையாளக்கார்ட்டுகள் பறிக்கப்படுகின்றன.

பொதுமக்களைக் கொண்டு வேலை செய்விக்கப்படுகின்றது. மாலை 4 மணிக்கு பின்பு பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள பிரதான கண்டி வீதியில் வீதித்தடை அமுலுக்கு வருகிறது.

திருநகரில் போக்குவரத்து துண்டிக்கப்படுகிறது.

எனவேதான் பொலீஸ் நிலையத்தை ஆனையிறவுக்கோ, அல்லது கொக்காவிலுக்கோ கொண்டு செல்லுமாறு கோருகின்றோம். அடிக்கடி இடம்பெறும் ஆயுதப்படையினரின் ரோந்து, துப்பாக்கி வேட்டுக்கள் மக்களை விரக்தி நிலைக்குக் கொண்டு வந்துள்ளன.

திருநகர், பாரதிபுரம் பிரபந்தனாறு, முழங்காவில், முவலான இடங்களில் பலர் கைது செய்யப்பட்டனர். அப்பாவி மக்கள் பலர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலைமை நீடிக்க மேலும் இடமளிக்கக் கூடாது.

வவுனியாவில் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிச.11

வவுனியா நகரில் நேற்று முன்தினம் நடந்த தேடுதலின் போது இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நடைபவனியாக வந்த ஆயுதப்படையினர் வவுனியா நகரை துருவித் துருவி சோதனை இட்டனர்.

வீதித்தடை போடப்பட்டு வாகனங்களும் சோதனை இடப்பட்டன.

இந்திய அர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை ஆகியன சம்பந்தமான விவாதத்தின் போதே இலங்கை நிலைவரங்களை எதிர்க்கட்சியினர் சுட்டிக் காட்டினர்.

வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:.

இலங்கை இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணும் பொறுப்பு இலங்கை அரசைச் சார்ந்தது.

அங்கு நடக்கும் வன்செயல்களை நிறுத்த அது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. எல்லோரும் ஏற்கக் கூடிய, பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே இந்தியா விரும்புகிறது.

உலகின் எந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கும் இன்னல் விளைந்தால் அது குறித்து இந்தியா அசட்டையாக இருக்க மாட்டாது.

இவ்வாறு திரு. பகத் தெரிவித்தார்.

இந்த அரசு இனப்பிரச்சினையை தீர்க்கும் என்று தோன்றவில்லை

ஆனால் தீர்வு அவசியம் - சிறிமா

கொழும்பு. டிச. 11

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த 8 வருடங்களாகப் பேசிவருகிறதே தவிர தீர்வு காணவில்லை. தீர்வு காணும் என்றும் எமக்குத் தோன்றவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா ஹோமாகமவில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; எனது குடியியல் உரிமையை பறிக்கும் அளவுக்கு நான் எந்த ஒரு பெரிய குற்றத்தையும் செய்யவில்லை. எனக்கு மீள உரிமைகள் வழங்கப்பட்டாலும் சரி வழங்கப்படாவிட்டாலும் சரி நான் இந்நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதை எவரும் தடுக்கமுடியாது.

நாம் ஆட்சியில் இருந்தபோது வெளிநாடுகளுக்கு செல்வதற்கு எனக்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் நான் அதைத் துஷ்பிரயோகம் செய்யவில்லை.

தற்போதைய ஆட்சியினரோ தாம் ஏதோ தீர்வு காணப் போவது போல் தமது சொந்த லாபம் கருதி உலக வலம் வருகின்றார்கள். இந்நாட்டுமக்களையும் ஏமாற்றுகிறார்கள்.

இன்று எமது நாட்டில் நிலவும் இனப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு தேவை.

1971 இல் புரட்சி வெடித்தபோது எமது அரசினால் அப்புரட்சியை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடிந்தது.

ஆனால் இந்த அரசாங்கம் இப்பிரச்சினை தொடர்பாக கடந்த 8வருடங்களாக பேசியது மாத்திரம் தான். தீர்வு காணவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

ரூபவாஹினி

11-12-1985

மாலை
5 மணி — செய்திகள்
5-05 — ஒலிம்பிக் விளையாட்டு
5-20 — 'பொலோ மீ'
5-35 — குழந்தைகள் நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 — நீங்களும் உங்கள் நாடும்
6-30 — செய்திகள் (தமிழ்)
6-55 — கலை அரங்கம் (தமிழ்)
7-25 — சிங்கள டெலி டிராமா கடைசி அத்தியாயம்
8-00 — செய்திகள் (சிங்களம்)
8-25 — ஜெபர்ஸன்ஸ் நகைச்சுவை
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-20 — சங்கீதம்
9 25 — ஸூம் இன்
9-40 — சிவாஜிகணேசன் பத்மினி நடித்த 'புனர் ஜென்மம்'
11-10 — ஒளிபரப்பு முடிவு

சாவகச்சேரியும் பாதிப்பு

சாவகச்சேரி, டிச. 11

சட்டவிரோத மின் பாவனை அதிகரித்து வருவதால் சாவகச்சேரி நகரம் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

அடுத்த ஆண்டு நெருக்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சனைகள்மூலம் தீர்வுக்கான வழி திறந்துள்ளது,

கேள்வி: திரு. அமிர்தலிங்கத்தின் மாற்று யோசனைகள் என்ன?

பதில்: அமிர்தலிங்கம் என்ன தேவை என்று சொல்கின்றார்? தமிழர்களுக்கு என்ன தேவை என்பது எனக்குத் தெரியாது.

ராஜீவ் காந்திக்கும் இதைத்தான் நான் சொன்னேன்.

கேள்வி: வடக்கு – கிழக்கு இணைப்புதான் நெருக்கடியான அம்சமாக இருப்பதுபோல் தெரிகின்றது.

பதில்: இணைப்பு என்ற கேள்விக்கே இடமில்லை. 1977இல் கிழக்கு மாகாணம் அமிர்தலிங்கத்தின் கொள்கைக்கு வாக்களிக்கவில்லை.

இப்போது நிலைமை மாறிவிட்டது என்று அமிர்தலிங்கம் நினைத்தால், இதை ஜனநாயகத் தேர்தல் ஒன்றில் பரீட்சித்துப் பார்க்கலாமே.

ஏன் மக்களைத் தீர்மானிக்க விடுவதற்கு அவர்கள் பயப்படுகின்றார்கள்?

காலியான ஆசனங்களுக்குத் தேர்தல் நடத்த நான் தயார்.

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகள் வட மாகாணத்துடன் இணைவது, கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறையை பிரித்து வெளியே எடுப்பது — இவைபற்றி எல்லாம் பேசப்படுகின்றதே.

பதில்: அந்தப் பிரச்சினையே எழவில்லை.

வடக்கு — கிழக்கு இணைப்பை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம்.

கேள்வி: இந்திய மாநிலம் ஒன்றுக்கு உள்ள அதிகாரங்களுடன் கூடிய அமைப்பு ஒன்றே தேவை என்று அமிர்தலிங்கம் சொல்கின்றார்.

பதில்: உண்மையிலேயே அதுதானே இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கேள்வி: முதல் அமைச்சர் ஒருவரை நியமிக்கவும் பதவி நீக்கம் செய்யவும் உங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதே.

பதில்: ஆம். இந்தியாவிலும் அதுதானே உள்ளது. முதலமைச்சரை ஆளுநர் நியமிக்கிறார். மாநிலத்தின் ஆளுநர் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்? இந்தியப் பிரதமரைத்தானே. அதைத்தானே நாமும் தீர்மானித்துள்ளோம்.

ஆனால் அதை ஆளுநர் ஊடாகச் செய்யவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, ஒருவரை நியமிக்கப் போகின்றார்.

கேள்வி: தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றார்கள்.

பதில்: தமிழ் இப்போதே ஒரு தேசிய மொழி. நாம் தானே அதையும் நடைமுறைப் படுத்தினோம்.

3ஆம் பிரிவு
86 A/L
DAY CLASS
ஆரம்பம்:
16 - 12 - 85 காலை 11 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

3ஆம் பிரிவு
86 A/L
WEEKEND CLASS
ஆரம்பம்: 15 - 12 - 85
9.30 - 10.30 - விலங்கியல் - திரு. நாகநாதன்
10.30 - 11.30 - தாவரவியல் - திரு. குகாதரன்
11,30 - 12.30 - இரசாயனவியல் திரு. தில்லைநாதன்
12.30 - 1.30 - பௌதிகவியல் - திரு. வர்ணம்
1.30 - 3.30 - தூய, பிரயோக கணிதம் - திரு. நல்லையா
(சுருக்கமான முறையில் முழுப் பாடப் பகுதிகளும் நிறைவாக்கப்படும்.)

PAPER CLASS
1ஆம் பிரிவு
ஆரம்பம்: 22 - 12 - 85
ஞாயிறு நண்பகல் 12.00 மணி
விபரங்களுக்கு:
NEW MASTER INSTITUTE
BMC Lane, JAFFNA.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி: 11-12-1985